## ஒத்தி வைக்கப்பட்ட பொருள்கள்

1. இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள் ( ஆண் மற்றும் பெண் ) யானைக்கால் நோய் தடுப்புத்திட்டம், ஓட்டுனர், துலக்குனர், சுகாதார மேற்பார்வையாளர்கள் , மகப்பேறு ஆயாக்கள், மகப்பேறு உவியாளர்களுக்கு 2010–2011 – ம் ஆண்டிற்கு சீருடை, தலைப்பாகை துணி காலணிகள் ஷு மற்றும் சீருடைகளுக்கான தையற்கூலிகள் வழஙக ஆகும் உத்தேச செலவினம் ரூ.7.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – 1. உத்தேச செலவினம் ரூ.7.00 லட்சத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று வினியோக உத்தரவு வழஙகியதை மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.22392/2010/எச்.1

**தீர்மான எண் : 226 – அனுமதிக்கப்பட்டது**

2. இந்நகராட்சியின் 2010–2011 – ம் ஆண்டின் திருத்திய வரவு செலவு மதிப்பீடு மற்றும் 2011–12–ம் ஆண்டின் உத்தேச வரவு செலவு மதிப்பீடு விவரஙகள் வருவாய், மூலதனநிதி மற்றும் குடிநீர் வினியோகம் மற்றும் வடிகால் நிதி ஆகியவற்றிற்கு தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்

**அலுவலக குறிப்பு** – 1. ஒப்புதல் அளிக்கலாம்.

2. உத்தேச வரவு செலவு மதிப்பீடு விவரஙகள் அச்சிட்டு புத்தக வடிவில் வழஙகும் வகைக்கு ஆகும் செலவு தொகையை வழஙகவும் மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.00601/2011/பி4

**தீர்மான எண் : 227 – அனுமதிக்கப்பட்டது**

## பொருள்கள்

1. இந்நகராட்சி பண்டக சாலையின் பழைய பொருட்கள் இருப்பு பதிவேட்டில் 01.04.2004 முதல் 31.03.2009 வரை பதியப்பட்டுள்ளவாறான குடிநீர் பராமரிப்பு, தெருவிளக்கு பராமரிப்பு மற்றும் வாகனம் பராமரிப்பு பணிகளின் போது பெறப்பட்ட பழைய பொருட்களை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் விற்பனை செய்திட 18.02.2011 அன்று நடவடிக்கை மேற்கொண்டதில் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் பெறப்படாத நிலையில் பொது ஏலத்தில் 8 பேர் கலந்து கொண்டனர். இதில் திரு.எஸ்.ரவி, நாகர்கோவில் என்பவரால் ரூ.1,56,000/– க்கு உயர்ந்த ஏல கேள்வி கேட்கப்பட்டது. இந்நிலையில் திரு.சி.நடராஜன், நாகர்கோவில் என்பவரால் ரூ.2,00,000/– க்கு மேற்படி பழைய பொருட்களை கேட்டு தொகையும் செலுத்தியதால் 28.02.2011 அன்று மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெறுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதில் பொது ஏலத்தில் 31 பேர்களும் ஒப்பந்தப்புள்ளியில் 4 பேர்களும் கலந்து கொண்டனர். பொது ஏல நடவடிக்கையில் திரு.கே.ஜெயபால், கோரதட்டுவிளை, ஆலன் கோடு என்பவரால் ரூ.4,11,000/– க்கும் ஒப்பந்தப்புள்ளியில் திரு.வி.மாதவன், வெள்ளாளர் மேலத்தெரு, நாகர்கோவில் என்பவரால்

ரூ,3,99,100/— க்கும் உயர்ந்த தொகையாக கேட்கப்பட்டது. மேற்படி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியின்படி அதிக பட்ச தொகை ரூ.4,11,000/— ஆக உள்ளதால் உயர்ந்த ஏலக்கேள்வி கேட்டுள்ள திரு.கே.ஜெயபால் என்பவரிடம் மேற்படி தொகையினை பெற்றுக் கொண்டு மேற்படி பழைய பொருட்களை எடுத்து செல்லும் பொருட்டு மேற்படியாருக்கு உத்தரவு வழஙகிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – அனுமதிக்கலாம். கோப்பு எண்.3486/2010/இ3

**தீர்மான எண் : 228 – அனுமதிக்கப்பட்டது**

2. இந்நகராட்சி பொறியியல் பிரிவு வாகனம் றி.என்.74 டி 2036 – க்கு தகுதி சான்று பெறுவதற்கான பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 25.02.2011 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் பார்வையிட்டு முடிவு செய்யலாம்.

1. கணேஷ் மோட்டார் ஓர்க்ஸ், நாகர்கோவில் – ரூ.17,260/–
2. கே.எஸ்.எஸ்.ஆட்டோமொபைல்ஸ், நாகர்கோவில் – ரூ.16,775/–
3. மணி மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில் – ரூ.14,825/–

**<u>அலுவலக குறிப்பு</u>** – 1. மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று எண்ணம் ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான தொகை ரூ.14,825/– க்கு கொடுத்துள்ள மணி மோட்டார் ஒர்க்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம்.

2. குடிநீர் வாகனத்தின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்கள் முன் அனுமதி பெற்று ப.ணிமேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம். கோப்பு எண்.7229/2008/இ3

**தீர்மான எண் : 229 – அனுமதிக்கப்பட்டது**

3. இந்நகராட்சி வாகனம் எண்.றி.என்.74 சி 9511 – ஐ இயக்குநர், மோட்டார் வாகன பராமரிப்புத்துறை , சென்னை அவர்கள் மூலம் கழிவு செய்திட நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்கள் செயல்முறை ஆணை எண்.42477/பி1/2009–1 நாள் 27.10.2009– ல் அறிவுறுத்தியதற்கிணஙக விலை நிர்ணயம். செய்து தர கேட்டு செயற்குறிப்பு அனுப்பி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதில் இயக்குநர், மோட்டார் வாகன பராமரிப்புத்துறை, சென்னை அவர்கள் செயல்முறை ஆணை எண்.ஏ1/எச்.1/18380/10, நாள் 09.02.2011 – ன் படி அனுமதி வழஙகப்பட்டுள்ளது. மேற்படி செயல்முறை ஆணையின்படி மேற்படி வாகனத்தை பொது ஏலத்தில் கழிவு செய்திட மற்றும் விளம்பர செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – அனுமதிக்கலாம். கோப்பு எண்.9118/2008/சி3

**தீர்மான எண் : 230 – அனுமதிக்கப்பட்டது**

**4.** இந்நகராட்சிக்கு சொந்தமான வட்டவிளை கணணி வரி வசூல் மையத்தில் கணனி இயக்கத்திற்கான Lan Extender மற்றும் மோடம் பழுதாகியுள்ளதை சீர் செய்திட **25.02.2011** அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட விலைப்புள்ளிகளை மன்றம் பார்வையிட்டு முடிவு செய்யலாம்.

**1.** பிட்ஸ் கம்யூட்டர் சிஸ்டம்ஸ், திருநெல்வேலி – ரூ.**4800/–**

**2,** சூப்பர்ப் சிஸ்டம்ஸ் & சர்வீசஸ், திருநெல்வேலி – ரூ.**5300/–**

**3.** கன்னிபோ ஸ்டீலேஜ், திருநெல்வேலி – ரூ.**5000/–**

**அலுவலக குறிப்பு** – மேற்படி வரப்பெற்ற மூன்று எண்ணம் விலைப்புள்ளிகளில் குறைவான தொகை ரூ.**4800/–** க்கு கொடுத்துள்ள பிட்ஸ் கப்யூட்டர் சிஸ்டம்ஸ், திருநெல்வேலி நிறுவனத்தின் விலைப்புள்ளியை அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.**6534/2007**/AP

**தீர்மான எண் : 231 – அனுமதிக்கப்பட்டது**

5. நாகர்கோவில் நகராட்சி வார்டு எண்.**27** வரிவிதிப்பு எண்.**38086** கதவு எண்.**220** எ, கே.பி.ரோடு தெருவில் உள்ள கட்டிடத்திற்கு சொத்துவரி உயர்வு சம்பந்தமாக திரு.கே.சிதம்பரம்பிள்ளை என்பவரால் நகராட்சிக்கு எதிராக தொடர்ந்துள்ள வழக்கு எண்.ஒ.எஸ்.எண்.**19/2011** விசாரணைக்கு வருவதால் திருமதி.எஸ்.எஸ்..ரெஜினி தேவி, நகராட்சி வழக்கறிஞர் ஆஜராகி மேற்படி வழக்கினை ஏற்று நடத்திடவும் அதற்கான செலவு தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.**4142/2011**/அ2

**தீர்மான எண் : 232 – அனுமதிக்கப்பட்டது**

**6.** நாகர்கோவில் கதவு எண்.**1,** வாத்தியார் விளை என்ற விலாசத்தில் உள்ள திரு.றி.அன்பு சுந்தர்ராஜ், த/பெ.(லேட்) ஜி.தங்கராஜ் மதுரை உயர்நீதிமன்ற கிளையில் **17.02.1996** – ல் பிறந்த குழந்தையின் தந்தையின் பெயர் நீக்கம் செய்ய தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எண்..W.P.(MD) 1730/2011 இவ்வழக்கு நகராட்சி சார்பாக மதுரை உயர்நீதிமன்ற கிளையில் உள்ள நகராட்சி வழக்கறிஞர் திருமதி.ஸ்ரீமதி அவர்களுக்கு வழக்கு நடத்த அனுமதியும் மற்றும் வழக்குக்கான அனைத்து செலவினஙகளுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.**005097/2011/எச்.3**

**தீர்மான எண் : 233 – அனுமதிக்கப்பட்டது**

7. இந்நகராட்சியின் 2011–2012 – ம் ஆண்டு வரவு செலவு மற்றும் 2010–2011 – ம் ஆண்டு திருத்திய வரவு செலவு திட்டம் அச்சடித்து புத்தக வடிவில் தயார் செய்து 70 பிரதிகள் வழஙக பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

1. சொர்ணா பிரிண்டர்ஸ், நாகர்கோவில் – ரூ.7280/–

2. ஜோசி பிரிண்டர்ஸ், நாகர்கோவில் – ரூ.6750/–

அலுவலக குறிப்பு – குறைந்த விலைப்புள்ளி ரூ.6750/– கொடுத்துள்ள ஜோசி பிரிண்டர்ஸ், நாகர்கோவில் விலைப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.00001/2011/பி3

**தீர்மான எண் : 234 – அனுமதிக்கப்பட்டது**

8. இந்நகராட்சிக்கு சொந்தமான வடசேரி ஆம்னி பேருந்து நிலைய டிக்கட் முன் பதிவு அறை மற்றும் கடைகளின் உரிமம் 31.03.2011 – டன் முடிவடைவதால் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகு துறை அரசாணை (நிலை) எண்.92 நாள் 03.07.2007– ன்படி மேலும் 3 ஆண்டுகள் சம்பந்தப்பட்ட குத்தகைதாரர்களால் உரிமம் புதுப்பித்தல் கட்டணம் மற்றும் 31.03.2011 முடியவுள்ள வாடகை செலுத்தப்பட்டுள்ளதால் 01.04.2011 முதல் 31.03.2014 வரை உரிமம் புதுப்பித்து வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | விபரம் | கணணி எண் | உரிமம் முடியும் நாள் |
|---|---|---|---|
| 1 | கடை எண்.1 | 2008619 | 31.03.2014 |
| 2 | கடை எண்.2 | 2008620 | 31.03.2014 |
| 3 | கடை எண்.3 | 2008621 | 31.03.2014 |
| 4 | டிக்கட் முன் பதிவு அறை எண்.1 | 2008623 | 31.03.2014 |
| 5 | டிக்கட் முன் பதிவு அறை எண்.2 | 2008624 | 31.03.2014 |

அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம். கோப்பு எண்.5350/2008/அ13

**தீர்மான எண் : 235 – அனுமதிக்கப்பட்டது**

9. திருமதி..பென்சி மோனிகா என்பவர் நாகர்கோவில் மாவட்ட பிரின்ஸ்பல் முன்சீப் நீதிமன்றத்தில் பிறப்பு சான்றிதழின் அடிப்படையில் வாரிசு சான்று தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எண்.ஒ.எஸ்.423/2010 இவ்வழக்கில் நகராட்சி ஆணையர் 3– வது பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளதால் இவ்வழக்கு நகராட்சி சார்பாக எடுத்து நடத்துவதற்கும் அதற்கான வழக்கு செலவு தொகை நகராட்சி வழக்கறிஞருக்கு வழஙக செலவினஙகளுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம். கோப்பு எண்.001533/2011/எச்.3

**தீர்மான எண் : 236 – அனுமதிக்கப்பட்டது**

10. இந்நகராட்சிக்கு சொந்தமான பெதஸ்தா வணிக வளாகத்தில் இயங்கி வரும் நியாயவிலை கடைக்கு தனி மின் இணைப்பு, நகராட்சி ஆணையர், நாகர்கோவில் நகராட்சி பெயரில் எடுக்க மின்வாரியத்திற்கு பதிவு கட்டணம், மின் இணைப்பு.தொகை, பிணை வைப்புத்தொகை மற்றும் மின் அளவு காப்பீட்டுத்தொகை ரூ,.1600/— அவசர அவசியம் கருதி, மன்ற அனுமதியை எதிர் நோக்கி செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதற்கு மன்றத்தின் அனுமதி.வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – ரூ.1600/— ( ஒரு ஆயிரத்தி அறுநூறு மட்டும் ) மின் வாரியத்திற்கு செலுத்தியதற்கு மன்றம் அனுமதிக்கலாம். கோப்பு எண்.7994/2009/அ13

**தீர்மான எண் : 237 – அனுமதிக்கப்பட்டது**

11. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4 – ல் நற்றமிழ் தெருவில் புதியதாக ஆழ்குழாய் கிணறு மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் பணிக்கு 23.11.2010 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பு நோக்குப் பட்டியல் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்

**ஒப்பந்தப்புள்ளி விபரம்**

திரு.என்.மணிகண்டன் (+) 17.84% மதிப்பீட்டைவிட கூடுதல்

**அலுவலக குறிப்பு** – 1. வரப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்தகாரர் திரு.என்.மணிகண்டன் (+) 17.84% மதிப்பீட்டைவிட கூடுதல் கொடுத்துள்ளார். ஒப்பந்தகாரர் தனது 24.02.2011 – . தேதிய கடிதத்தின்படி மதிப்பீட்டு விகிதத்தில் இருந்து (–) 1.74% குறைவாக செய்து வழங்கலாம் என இசைவு கடிதம் ( Negotiation ) வழங்கி உள்ளார். எனவே மதிப்பீட்டைவிட (–) 1.74 % குறைவு கொடுத்துள்ளதை ஏற்கவும், மேற்படி பணி குடிநீர் பணி அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்கள் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

2. நகர்மன்றத்தீர்மானம் எண்.201/ நாள் 28.06.2010 – ல் ரூ.2,00,000/— ற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ம.எண்.252/2010—2011

**தீர்மான எண் : 238 – அனுமதிக்கப்பட்டது**

12. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4 – ல் அருந்ததியார் தெருவில் புதியதாக ஆழ்குழாய் கிணறு மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் பணிக்கு 23.11.2010 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பு நோக்குப் பட்டியல் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்

**ஒப்பந்தப்புள்ளி விபரம்**

திரு.என்.மணிகண்டன் (+) 17.84% மதிப்பீட்டைவிட கூடுதல்

அலுவலக குறிப்பு – 1. வரப்பட்ட ஒரு ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்தகாரர் திரு.என்.மணிகண்டன் (+) 17.84% மதிப்பீட்டைவிட கூடுதல் கொடுத்துள்ளார். ஒப்பந்தகாரர் தனது 24.02.2011 – ம் தேதிய கடிதத்தின்படி குறைவாக செய்து வழஙகலாம் என இசைவு கடிதம் ( Negotiation ) வழஙகி உள்ளார். எனவே மதிப்பீட்டைவிட (–) 1.74 % குறைவு கொடுத்துள்ளதை ஏற்கவும், மேற்படி பணி குடிநீர் பணி அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்கள் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழஙகியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

2. நகர்மன்றத்தீர்மானம் எண்.201 நாள் 28.06.2010 – ல் ரூ.2,00,000/– ற்கு நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது. ம.எண்.251/2010–2011

**தீர்மான எண் : 239 – அனுமதிக்கப்பட்டது**

13. நாகர்கோவில் நகராட்சி ஆணையர், நகராட்சி பொறியாளர் மற்றும் நகரமைப்பு அலுவலர் ஆகியவர்களின் மார்ச் 2011 – ம் மாதத்திய தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் பதிவு செய்யலாம். கோப்பு எண்.6589/2011/சி1

**தீர்மான எண் : 240 – பதிவு செய்யப்பட்டது**

14. இந்நகராட்சி பகுதிகளில் உள்ள உணவு பொருள் விற்பனை செய்யபப்படும் இடஙகளில் உணவு கலப்பட தடைச்சட்டத்தின் கீழ் உணவு ஆய்வாளர்களால் உணவு மாதிரி எடுத்து சென்னை கிண்டி அரசு உணவு பகுப்பாய்வாளர் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கும் இது சம்மந்தமாக அனைத்து மேல் நடவடிக்கைக்கும் 2011–2012 ஆண்டுக்கான உத்தேச செலவினம் ரூ.50,000/– க்கும் மற்றும் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இணை இயக்குனர் ( பிஎப்.எ) அவர்களின் அவ்வப்போது உத்திரவுபடி இந்நகராட்சி பகுகளில் சிறப்பு ஆய்வு மூலம் பொது சுகாதார சட்டத்தின் கீழ் Non Statutory உணவு மாதிரி துப்புரவு ஆய்வாளர் மூலம் எடுத்து அனுப்புவது தொடர்பான 2011–2012– ம் ஆண்டுக்கான உத்தேச செலவினம் ரூ.15,000/– க்கும் நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம் கோப்பு எண்.019099/2009/எச்.3

**தீர்மான எண் : 241 – அனுமதிக்கப்பட்டது**

15. நாகர்கோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 கட்டையன்விளை நகரளவு எண்.அ1/20–19 இடத்தில் 3.309 சென்று மனையும் அதிலுள்ள குடிநீர் கிணறும் பொது மக்களின் உபயோகத்திற்காக திரு.வி.செல்வராஜ், த/பெ. உதிரமுத்து நாடார் அவர்கள் மேற்படி இடத்தை நகராட்சி ஆணையாளர் பெயருக்கு 09.11.2010 அன்று பத்திர எண்.2518 – ன்படி எழுதிக் கொடுத்து பத்திர பதிவு செய்து கொடுத்துள்ளார். மேற்படி தானமாக எழுதிக்கொடுக்கப்பட்ட பத்திர ஆவணம் நகர்மன்றத்தின் .பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். கோப்பு எண்.9419/2010/எப்.1

**தீர்மான எண் : 242 – பதிவு செய்யப்பட்டது**

16. இந்நகராட்சி பொறியியல் பிரிவு வாகனஙகள் றி என்.74 –3774 மற்றும் றி.என்.கே.4416 ( கழிவு செய்ய நடவடிக்கையில் உள்ளவை) ஆகியவற்றிற்கு காப்பீடு புதுப்பித்து பெறுவதற்கு ரூ.6800 + 1403 = 8203 /.– ஐ நியூ இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்திற்கு செலுத்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்ற அனுமதியை எதிர் நோக்கி தொகை செலுத்தி காப்பீடு பெற நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். கோப்பு எண்.176/2003/இ3

**தீர்மான எண் : 243 – ரூபாய் 8203 /– என்ற திருத்தத்துடன் அனுமதிக்கப்பட்டது**

17. நாகர்கோவில் நகராட்சி வார்டு எண்.11 வரிவிதிப்பு எண்13624 கதவு எண்.60 எ, போலீஸ் ஸ்டேஷன் ரோடு வரி உயர்வு செய்யப்பட்டதற்கு சம்பந்தமாக திருமதி.பாத்திமா அருள் ஜெயா என்பவரால் நகராட்சிக்கு எதிராக தொடர்ந்துள்ள வழக்கு ஒ.எஸ்.எண்.688/2010 விசாரணைக்கு வருவதால் நகராட்சி வழக்கறிஞர் ஆஜராகி மேற்படி வழக்கினை ஏற்று நடத்திடவும் அதற்கான செலவு தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது,.

**அலுவலக குறிப்பு** – அனுமதிக்கலாம். கோப்பு எண்.22501/2010/அ3

**தீர்மான எண் : 244 – அனுமதிக்கப்பட்டது**

18. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.43 – ல் சரலூா் குறுக்கு சாலை, பெரியவிளை குறுக்கு சாலை ஆகியவற்றில் தலா இரு 40 W குழல் விளக்குகள் அமைக்க நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர்ந்ததற்கு மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலக குறிப்பு –** சரலூா் குறுக்கு சாலை, பெரியவிளை குறுக்கு சாலை ஆகியவற்றில் தலா இரண்டு 40 W குழல் விளக்குகள் அமைக்க நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதியுடன் மேல் நடவடிக்கை எடுத்தற்கும் மன்றம் அனுமதிக்கலாம். கோப்பு எண்.8518/2008/இ4

**தீர்மான எண் : 245 – அனுமதிக்கப்பட்டது**

19. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2 கேசவதிருபாப்புரம் நகரளவு எண்.அ2/5–7 ல் திருமதி.சரோஜினி அப்பு என்பவர் பட்டா நிலத்தில் நீர்த்தேக்க தொட்டி கட்டப்பட்டதை எதிர்த்து ஒ.எஸ்.எண்.16/2007 – ன்படி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வந்தது.

இந்நிலையில் மேற்கண்ட வழக்கின் மீது நகாட்சி சார்பில் வழக்கிடை விண்ணப்பம் ஐ.எ.எண்.236/2010 – ல் வழக்கு முதன்மை சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நடைபெற்று நகராட்சிக்கு எதிராக வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட வழக்கின் மீது சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் அப்பீல் வழக்கு தாக்கல் செய்து அதன் விபரத்தினை நீதிமன்றத்தில் தெரிவிக்க வேண்டியுள்ளதால் சென்னை உயர்நீதிமன்றம்

மதுரை கிளையில் மேற்கண்ட வழக்கிற்காக திருமதி.ஸ்ரீமதி வழக்கறிஞர் ஆஜராகி வழக்காடவும் அதற்கான வழக்கிடை செலவு மற்றும் வழக்கறிஞர் கட்டணத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** – அவசர அவசியம் கருதி மேல் நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.9358/2007/இ1

**தீர்மான எண் : 246 – <u>அனுமதிக்கப்பட்டது</u>**

20. இந்நகராட்சியில் வரைவாளராக பணிபுரிந்து வந்த திரு.அகமது என்பவர் தமது பதவியை 27.08.1976 ல் ராஜினமா செய்துவிட்டு சென்றுவிட்டபடியால் அன்னரின் ராஜினாமா ஏற்றுக்கொள்ளப்பட்டு 30.12.1976 – ல் அவரை பணியில் இருந்து விலக்கி கொள்ளப்பட்டது.

இந்நிலையில் தமக்கு ஓய்வூதியம் வழஙகவேண்டும் என தெரிவித்து சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு W.P.(MD) No.13376/2009 – ன் படி வழக்கு தொடர்ந்து வழக்கின் தீர்ப்பில் நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்கள் முன்னிலையில் 01.03.2010 அன்று நேரில் ஆஜராகி விசாரணை செய்யப்பட்டு ஓய்வூதியம் பெற தகுதியில்லை என தெரிவிக்கப்பட்டது.

எனவே திரு,அ.அகமது மீண்டும் சென்னை உயர்நீதிமன்றம் மதுரைகிளையில் வழக்கு W.P. No.14571/2010 – ன் படி வழக்கு தாக்கல் செய்து நகராட்சி ஆணையாளரை 6 வது பிரதிவாதியாக கட்சி சேர்த்து வழக்கு தொடர்ந்துள்ளார்.

எனவே மேற்கண்ட வழக்கில் நகராட்சி சார்பில் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கறிஞர் திருமதி.ஸ்ரீமதி அவர்கள் ஆஜராகி வழக்கை நடத்திடவும் , வழக்கறிஞர் கட்டணம் மற்றும் வழக்கிடை செலவுத்தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** – அவசர அவசியம் கருதி மேல் நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.15679/1976/இ1

**தீர்மான எண் : 247 – <u>அனுமதிக்கப்பட்டது</u>**

21. இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அலைந்து திரியும் ஆடு மாடுகள் மற்றும் பன்றிகளை தெருவில் விடாமல் பராமரிக்கவும் அவ்வாறு விடும் பட்சத்தில் மேற்படி பிராணிகளை ஒப்பந்ததாரர் மூலம் பிடித்து அப்புறப்படுத்தவும் அதற்கான அபராதம் விதித்தல் சம்மந்தமான விளம்பரம் தினத்தந்தி நாளிதழில் பிரசுரம் செய்த வகைக்காக ரூ.560/– வழஙகுவதற்கும் மேலும் இது போன்ற விளம்பரஙகள் இனிவரும் காலஙகளில் செல்வதற்கும் அதற்கான செலவுகளுக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>** – அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.7714/2009/எச்.1

**தீர்மான எண் : 248 – <u>அனுமதிக்கப்பட்டது</u>**

22. மூன்று நகர நல்வாழ்வு மையைங்களில் பயன்பாட்டிற்காக இயக்குனர், குடும்பநலத்துறை, சென்னை – 6 அவர்களின் உத்தரவு கடித எண்.10665/FW/C4/2010, நாள் 06.07.2010 – ன் படி அனுமதிக்கப்பட்ட ரூ.1,50,000/–க்கான மருந்து பொருட்கள் (Tamil Nadu Medical Service Corporation ) லிருந்து வாங்கி பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்சமயம் புற நோயாளிகள் அதிகமாக வருவதால் மருந்து கையிருப்பு குறைந்துள்ளது. எனவே அத்தியாவசிய தேவையை முன்னிட்டு ரூ.75,000/– க்கு மருந்து பொருட்கள் தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்திடமிருந்து நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – 1. அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதியுடன் மேல்நடவடிக்கை எடுத்ததையும் மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.14439/2010/எச்.4

**தீர்மான எண் : 249 – அனுமதிக்கப்பட்டது**

23. பாதாள சாக்கடை திட்ட கழிவு நீர் அடைப்புகளை சுத்தம் செய்யவோ அல்லது கழிவுநீர் நச்சு தொட்டிகளை ( septic.tank) சுத்தம்.செய்யவோ துப்புரவு பணியாளர்களை இறக்கி பணி செய்யக்கூடாது எனவும் உரிய இயந்திரஙககள கொண்டு பணி செய்யவும் உயர்நீதிமன்ற வழக்கு எண்.W.P.No.24403/2008 – ல் பிறப்பிக்கப்பட்டஉத்தரவினை தொடர்ந்து அரசு ஆணை எண்.G.O.(Ms).No.293 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (நப) துறை நாள் 26.11.2010 – ல் தெரிவித்துள்ள ஆணையின் படியும் நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், திருநெல்வேலி அவர்களின் கடிதஙகளின் படியும் நாகர்கோவில் நகராட்சி பகுதிகளில் கழிவு நீர் சந்து தொட்டிகளில் துப்புரவு பணியாளர்களை இறக்கி பணி.செய்யக்கூடாது என தெரிவித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது,. மேலும் தனியார் கழிவு நீர் வாகன உரிமையாளர்களை அழைத்து நகர்மன்ற தலைவர் அவர்கள் தலைமையில் விழிப்புணர்வு கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. மேலும் அனைத்து உணவகஙகள், தஙகும் விடுதிகள், மருத்துவமனைகள், திரையரஙகுகள் மற்றும் திருமண மண்டபஙகளின் உரிமையாளர்கள் மற்றும் சஙகஙகளின் பிரதிநிதிகளை அழைத்து நகர்மன்ற தலைவர் அவர்கள் தலைமையில் கூட்டஙகள் நடத்தப்பட்டுள்ளது. கடிதம் பொதுமக்கள் கூடும் முக்கிய சாலையில் விழிப்புணர்வு வாசகஙகள் அடஙகிய பேனர்கள் நிறுவப்பட்டு சுகாதாா ஆய்வர்கள் மூலம் தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட்டு வருகிறது.

மேலும் நகரரட்சிக்குட்பட்ட பகுதிகளில் கழிவு நீர் தொட்டிகளில் உள்ள அடைப்புகளை சுத்தம் செய்ய நகராட்சி பணியாளர்களை கொண்டு பணி செய்வதற்கு ஏதுவாக பாதுகாப்பு உபகரணஙகள் ( Safety Equipments) வாஙகுவதற்கு ஆகும் செலவினஙகளுக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.4596/2010/இ1

**தீர்மான எண் : 250 – அனுமதிக்கப்பட்டது**

**24.** இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்க்கண்ட 6 இடஙகளிலுள்ள குடிநீர் போர்வெல் பம்பு செட்டுகளிலுள்ள பழுதுகளை சரிசெய்ய ஆகும் உத்தேச செலவு ரூ.39,400/– க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| I | வார்டு எண்.1 கட்டையன்விளை அம்மன்கோவில் வடக்குத்தெரு போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் ( காமராஜ் நகர் பக்கம் ) | ரூ. |
| | 1.5 குதிரை வேக (4'') சப்மெர்சிபிள் பம்பு செட் மற்றும் பேனல் போர்டு ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல் | 8600/– |
| II | வார்டு எண்.44 கீழராமன் புதுார் பார்க்ரோடு நேருத்தெரு போர்வெல், வாட்டர் சப்ளை ஸ்கீம் | |
| | 1.5 குதிரை வேக (4'') சப்மெர்சிபிள் பம்பு செட் மற்றும் பேனல் போர்டுஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல் | 7800/– |
| III | வார்டு எண்.1 கட்டையன்விளை எம்.எஸ்.ரோடு போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் | |
| | 1.5 குதிரைவேக (4'') சப்மெர்சிபிள் பம்பு செட் மற்றும் பேனல் போர்டுஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல் | 6800/– |
| IV | வார்டு எண்.11 பறக்கின்கால் பண்ட் ( சபரி டேம் பக்கம்) போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் | |
| | 3 குதிரைவேக பேனல் போர்டு ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல் | 2300/– |
| V | வார்டு எண்.30 வடசேரி நயினார் பில்டிஙக் கழிவறை போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் | |
| | 1.5 குதிரைவேக சப்மெர்சிபிள் பம்பு செட் மற்றும் பேனல் போர்டு ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல் | 7900/– |
| VI | வார்டு எண்.33 வடசேரி வடக்கு புதுத்தெரு போர்வெல் வாட்டர் சப்ளை ஸ்கீம் | |
| | பழுதுபட்ட 1.5 குதிரைவேக சப்மெர்சிபிள் பம்பு செட்டை துாக்கிவிட்டு மாற்று புதிய 3 குதிரை வேக சப்மெர்சிபிள் பம்பு செட் இறக்கி இயக்குதல் மற்றும் 1.5 குதிரை வேக பேனல் போர்டு ஸ்டார்டர் பழுது பார்த்து இயக்குதல் | 6000/– |

<u>அலுவலக குறிப்பு</u> – அனுமதிக்கலாம். கோப்பு எண்.003333/2011/இ2

**தீர்மான எண் : 251 – அனுமதிக்கப்பட்டது**

**25.** இந்நகராட்சிக்கு சொந்தமான அனாதை மடத்தில் 18.04.2011 முதல் 05.06.2011 வரை 49 நாட்கள் இராட்டினஙகளுடன் கூடிய பொருட்காட்சி நடத்த நிபந்தனைகளுடன் வழஙகப்பட்ட அனுமதி ந.க.எண்.14079/2010/எப்.1 நாள் 15.03.2011 – ஐ தொடர்ந்து மேற்படி பொருட்காட்சி பார்க்க வருகை தரும் பொதுமக்கள் வாகனஙகளிடம் கட்டணம் வசூலித்திட, தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் இருந்ததால் பொது ஏல நடவடிக்கைக்கு உட்படுத்த இயலாத நிலை நிலையேற்பட்டதால் துறை மூலம் வசூல் செய்திட அவசர அவசியம் கருதி ரசீது புத்தகஙகள் அச்சடிக்க கருதி உள்ளூரில் விலைப்புள்ளிகள் கோரப்பெற்றதில் கீழ்க்கண்ட விபரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண். | விலைப்புள்ளி சமர்ப்பித்துள்ள நிறுவனத்தின் முகவரி | 100 ரசீதுகள் கொண்ட ரசீது புத்தகம் ( with counterfile) அச்சடித்து தர தொகை ரூ. |
|---|---|---|
| 1 | M/s.Sahci dhaya graphics off set printers. Nagercoil - 4 | 31.00 |
| 2 | M/s.Shiva Screen, Mooventher Nager, Nagercoil - 4 | 32.25 |
| 3 | M/s.Galaxy Printers, K.P.Road, Nagercoil | 33.50 |

மேற்படி விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி சமர்ப்பித்த நிறுவனம் மூலம் ரசீது புத்தகங்கள் அச்சடித்து வாஙக நடவடிக்கை மேற்கொண்டமைக்கும், அதற்காகும் செலவினஙகளுக்கும், நகராட்சி பணியாளர்கள் மூலம் துறை மூலம் வசூல் செய்ய நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று உத்தரவு வழஙகப்பட்டதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு**</u> – அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.16170/2008/அ13

**தீர்மான எண் : 252 – அனுமதிக்கப்பட்டது**

**26.** இந்நகராட்சி நகர்மன்ற தலைவர் அவர்களால் **22.04.2011** அன்று நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில் இந்நகராட்சி அலுவலகம் மற்றம் வடசேரி பேருந்து நிலையத்தின் கீழ்கண்ட வசதிகள் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.

1. வடசேரி பேருந்து நிலையத்தில் மின்தடை நேரஙகளில் செயல்படும் விதமாக **800** V.A. திறன் கொண்ட **3** எண்ணம் இன்வர்டர்கள் பொருத்துதல்
2. அலுவலக பணியாளர்கள் வருகைப்பதிவேடு கணணி மூலம் பதிவு செய்தல்
3. அலுவலக அனைத்து பிரிவுகளிலும் மற்றும் இரண்டு கேட்டிலும் வெப் கேமிராக்கள் பொருத்துதல்

<u>**அலுவலக குறிப்பு –**</u> அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 253 – அனுமதிக்கப்பட்டது**

**27.** இந்நகராட்சி வாகனம் எண்.றி.என்.**74** ஜே **2839 –**க்கு **1,60,000** கி.மீ.இயக்கப்பட்டதற்கான ஆயில் சர்வீஸ் சஸ்பென்சர் சரி செய்தல் மற்றும் வாகனம் முழுவதும் பராமரிப்பு செய்தல் பணிகளை ஆனைமலை ஸ்ஏஜென்ஸீஸ் மதுரை பிரைவேட் லிமிடெட் திருநெல்வேலி நிறுவனத்தில் நேரிடையாக செய்திடவும் உத்தேச செலவினம் ரூ.**15,000/–** க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு**</u> – அனுமதிக்கலாம்

கோப்பு எண்.5021/2006/இ3.

**தீர்மான எண் : 254 – அனுமதிக்கப்பட்டது**